செ.வெ.எண்: 27 /ஜீன் / 2019 நாள்: 08.06.2019

**தமிழ்நாடு அரசு தொழில் நுட்பக் கல்வித் துறை,**

**அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, துவாக்குடிமலை, திருச்சி–22**

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, துவாக்குடிமலை, திருச்சி–22–ல் தற்பொழுது நேரடி இரண்டாமாண்டு, முதலாமாண்டு (முழு நேரம் மற்றும் பகுதிநேரம்) பட்டய சேர்க்கையின் போது ஏற்பட்டுள்ள துறை வாரியான காலியிடங்களை இரண்டாம் கட்ட மாணவர் சேர்க்கை மூலம் நிரப்பிக் கொள்ள தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து டிப்ளமோவிற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. விண்ணப்பக் கட்டணம் ரூ.150/-. SC/ST பிரிவினர் சான்றொப்பமிட்ட சாதிசான்றிதழை கொடுத்து இலவசமாக விண்ணப்பம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ள மற்றும் பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் இக்கல்லூரிக்கு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நேரடி இரண்டாமாண்டு பட்டயப்படிப்பு – துணை கலந்தாய்வுக்கான நாட்கள்**

| | |
|---|---|
| 1. | விண்ணப்பங்கள் வழங்குவது மற்றும் பெறுவதற்கான கடைசி நாள் 12.06.2019 |
| 2. | மாணாக்கர்கள் சேர்க்கைக்கான கடைசி நாள்: 14.06.2019 |

**முதலாமாண்டு மற்றும் பகுதி பட்டயப்படிப்பு – துணை கலந்தாய்வுக்கான நாட்கள்**

| | |
|---|---|
| 1. | விண்ணப்பங்கள் வழங்குவது மற்றும் பெறுவதற்கான கடைசி நாள் 28.06.2019 |
| 2. | மாணாக்கர்கள் சேர்க்கைக்கான கடைசி நாள்: 05.07.2019 |

இக்கல்லூரியில் சிவில், மெக்கானிக்கல், எலக்டிரிக்கல், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் ஆகிய 5 பாடபிரிவுகளில் முதல் சுழற்சியும், இரண்டாம் சுழற்சியும் உள்ளது. சர்க்கரை தொழில் நுட்பத்தில் முதல் சுழற்சி உள்ளது. முழுநேர டிப்ளமோ படிப்பிற்கு ஆண்டொன்றிக்கு கட்டணம் சுமார் ரூ.2,200/- மட்டுமே. மேலும் இக்கல்லூரியில் சேர்ந்து படிக்கும் மாணவ/ மாணவியர்கள் தமிழக அரசின் இலவச மடிக்கணிணி, இலவச பஸ் பாஸ், கல்வி உதவித் தொகை, உழவர் பாதுகாப்புத் திட்ட உதவித் தொகை ஆகியவற்றை பெற்று பயன்பெறலாம்.

இக்கல்லூரி சிறந்த கட்டமைப்பு, தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், தரமான கல்வி மற்றும் ஆய்வக வசதி, சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற பல வசதிகள் கொண்டது. இக்கல்லூரியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனி விடுதி வசதிகள் உள்ளது. திருச்சி தஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் BHEL அருகில் இக்கல்லூரி அமைந்துள்ளது.

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகளிடையே வாரியத் தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி விகிதமும், இறுதி ஆண்டில் படிக்கும் போதே கேம்பஸ் இண்டர்வியூ மூலம் அதிகபட்சமாக மாதம் ரூ.30,000/- வரை சம்பளம் பெறும் பணிநியமன ஆணையினை பெற்றுத்தரும் இக்கல்லூரியில் சேர்ந்து படித்து பயன்பெறுமாறு 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவ/ மாணவியர்களையும் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கைக்கு +2, (Science Group, Maths Group & Vocational), ITI (இரண்டாண்டு) தேர்ச்சி பெற்ற மாணவ/ மாணவியர்களையும் இக்கல்லூரி நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

மேலும் விபரங்களுக்கு: முதல்வர், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, துவாக்குடி மலை, திருச்சி–22 தொலைபேசி எண். 0431-2552226. மின்னஞ்சல். gptc_trichy@yahoo.co.in

PRINCIPAL
GOVT. POLYTECHNIC COLLEGE
TRICHY

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,திருச்சிராப்பள்ளி.